[1987 மார்ச் 31

(ஆ) வடலூரிலுள்ள எஸ்.ஐ.எல். தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பாதிப்பு.

திரு. ஏ. தங்கராசு: பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள வடலூர் எஸ்.ஐ.எல். கம்பெனியிலிருந்து வெளிவரும் ஆசிட் கலந்த கழிவு நீர், அருகாமையிலுள்ள ஐய்யனேரியில் கலந்துவிடுவதால் அப்பகுதி விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பல ஆடு மாடுகள் இறந்தது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டம், வடலூரில் உள்ள திருவாளர்கள் சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் இரண்டு தொழிற்சாலைகளாக, இன்ஸுலேட்டர் மற்றும் இன்ஸுலேட்டர் பிட்டிங்ஸ் ஆகியவற்றைத் தயாரித்து வருகின்றது. முதல் தொழிற்சாலை மாதம் ஒன்றிற்கு இன்ஸுலேட்டர் 1,000 மெட்ரிக் டன்னும், வார்ப்படம் 175 மெட்ரிக் டன்னும் மற்றும் போர்ஜிங்ஸ் 18 மெட்ரிக் டன்னும் தயாரிக்கிறது. க்வார்ட்ஸ், ஃபெல்ட்ஸ்பார், களிமண், அலுமினா டால்மைட், பெண்டோனைட், இரும்பு வளையம், ரோமிங் மாஸ் முதலிய மூலப் பொருட்கள் செய்முறையில் உபயோகிக்கப்படுகிறது.

அன்றாடம் மற்றும் செய்முறைகளுக்கும் தினசரி உபயோகப்படுத்தப்படும் நீரின் அளவு முறையே 100 கிலோ லிட்டர் மற்றும் 2,160 கிலோ லிட்டர் ஆகும். அன்றாடக் கழிவுநீர் மற்றும் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் அளவு முறையே 85 கிலோ லிட்டர் மற்றும் 1,810 கிலோ லிட்டர் ஆகும்.

இரண்டாவது தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 400 மெட்ரிக் டன் இன்ஸுலேட்டர் தயாரிக்கிறது. உபயோகப்படுத்தும் நீரின் அளவு அன்றாடத் தேவை மற்றும் செய்முறைக்கு முறையே 13

1987 மார்ச் 31] [திரு. ப. உ. சண்முகம்]

கிலோ லிட்டர் மற்றும் 1,200 கிலோ லிட்டர் ஆகும். தொழிற் சாலையிலிருந்து வெளியேற்றக்கூடிய அன்றாட மற்றும் தொழிற் சாலைக் கழிவுநீரின் அளவு முறையே 9 கிலோ லிட்டர் மற்றும் 1,000 கிலோ லிட்டர் ஆகும்.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26-வது பிரிவின்கீழ் இவ்விரு தொழிற்சாலைகளும் தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளன.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தர நிர்ணயத்திற்கு உட்பட்டு தொழிற்சாலைக் கழிவு நீரை சுத்தி கரிப்பு செய்து வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இவ்விரு தொழிற்சாலைகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. துத்தநாகப்பூச்சு பிரிவிலிருந்து உற்பத்தியாகின்ற தொழிற்சாலைக் கழிவு (10 கிலோ லிட்டர்) அழுத்த வடிகட்டி மற்றும் அமிலக் கழிவுகளிலிருந்து உற்பத்தியாகிறது. மண் பாண்டப் பொருள் பிரிவிலிருந்து உற்பத்தியாகின்ற தொழிற் சாலைக் கழிவு இரு மண் தொட்டிகள் மூலம் படிய வைக்கப்பட்டு வெளியேற்றுவதற்கு முன் துத்தநாகப்பூச்சுப் பிரிவு தொழிற் சாலைக் கழிவு நீருடன் கலந்து வெளியேற்றப்படுகிறது. இவ்வாறு வெளியேற்றப்படும் தொழிற்சாலைக் கழிவுநீர் வெளிர் நிறத்திலும் மிதக்கும் திடப்பொருள்கள், முழுவதும் கரைந்த திடப்பொருள், துத்தநாகம், மாங்கனீசு மற்றும் ஈயம் கலந்ததாகவும் இருக்கும்.

3—3—1987 அன்று தொழிற்சாலையை பார்வையிட்டபோது தொழிற்சாலைக் கழிவுநீர் தொழிற்சாலைக்கு வெளியே ஒரு ஓடையில் கலக்கப்பட்டு அவ்வோடை முடிவாக அய்யன் ஏரியில் கலப்பது தெரியவந்தது. தொழிற்சாலைக் கழிவுநீரை பாசனத் திற்காக விவசாயிகளால் நெல் வயலுக்குத் திருப்பப்படுவதும் தெரியவந்தது.

இத்தொழிற்சாலை தற்போதுள்ள சுத்திகரிப்பு முறையை மேலும் உயர்த்த கருத்துரு ஒன்றை அளிக்குமாறு கோரப்பட்டது. இத்தொழிற்சாலைகளுக்கு அனுமதி இன்னும் புதுப்பிக்கப்பட வில்லை. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அந்தக் கம்பெனியை 3—3—1987 அன்று பார்வையிட்டதாகவும் அந்தக் கழிவு நீர் பாசனத்திற்குத் திருப்பி விடப்பட்டு விவசாயிகளால் பயன்படுத்தப்படுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தாலும் அந்தக் கம்பெனிக்கு மாசு கட்டுப்பாடு வாரியம் இன்னும் அனுமதி வழங்கவில்லையென்பதையும் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளின் நிலங்களும், குடிநீரும் பல்வேறு வகைகளிலே பாதிக்கப்படுகின்றன. அந்த அய்யன் ஏரிக்கு மேல் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய நிலங்கள் பாதிக்கப்பட்டுவிட்டன. இந்த நிலையில் உடனடியாக அந்தக் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி அந்த விவசாயிகளைப் பாதுகாக்க இனிமேலாவது அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கழிவு நீர் வெளியாகின்ற காரணத்தினால் விளைநிலங்கள் பல பாதிக்கப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியும். இதுபோன்ற மோசமான நிலைமைகளைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வாரியத்திற்கு அரசு அறிவுறுத்தியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை அரசு ஏற்று நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) நிதி திரட்டியதற்காக மின் வாரிய ஊழியர்கள்மீது எடுத்துள்ள நடவடிக்கை.

திரு. வி. பி சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மின் ஊழியர்களில் சிலர் அவர்களின் தொழிற் சங்கம் வெளியிட்ட சிறப்பு மலருக்கு விளம்பரம் பெற்றார்கள் என்பதற்காக 46 ஊழியர்கள் மீது எடுத்த ஒழுங்கு நடவடிக்கைகளைக் கைவிட வேண்டுமென்று தொழிலாளர் துறை ஆணையரின் உத்தாவிற்குப் பிறகும், மற்றும் சென்னை உயர்நீதி மன்றம் தடை உத்திரவு போட்ட பிறகும், தமிழ்நாடு மின்வாரியம் தன்